திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# இன்று நுண்ணீர் பாசன சிறப்பு முகாம்: ஆட்சியர் அறிவிப்பு

நுண்ணீர் பாசனக் கருவிகளை விவசாயிகள் விரைவில் பெற்றிட ஏதுவாக நுண்னீர் பாசன சிறப்பு முகாம்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வரும் பிப்ரவரி 1, 2-ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்கு இப்போது போதிய தண்ணீர் இல்லாத நிலையை மேற்கொள்ள ஏதுவாக நுண்ணீர் பாசனத்தை விவசாயிகள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நுண்ணீர் பாசனக் கருவிகளை விரைவில் பெற்றிட ஏதுவாக நுன்னீர் பாசன சிறப்பு முகாம்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7 வட்டங்களில் வரும் பிப்ரவரி 1, 2-ம் தேதிகளில் நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் வட்டத்துக்கான முகாம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் வரும் பிப்ரவரி 1-ம் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற உள்ளது. உத்தரமேரூர் வட்டத்துக்கான முகாம் காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற உள்ளது.

செங்கல்பட்டு வட்டத்துக்கான முகாம் வரும் பிப்ரவரி 2-ம் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மாவட்ட ஆட்சியர் தலைமை காட்டாங்கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், திருப்போரூர் வட்டத்துக்கான முகாம் மதியம் 1 மணி முதல் 5 மணி வரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் திருப்போரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

திருக்கழுக்குன்றம் வட்டார அலுவலகத்தில் அந்த வட்டாரத்துக்கான முகாம் பிப்ரவரி 2-ம் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலும், மதுராந்தகம் வட்டார அலுவலகத்தில் மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெறும். சித்தாமூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் பங்கேற்க வரும் விவசாயிகள் விண்ணப்பம், பட்டா, சிட்டா, அடங்கல், நில அளவை வரைபடம் ஆகிய நகல்கள் மற்றும் போட்டோவுடன் கலந்து கொள்ள வேண்டும். தேவையான விண்ணப்பப்படிவங்கள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர் அல்லது வேளாண்மை பொறியியல் துறையினரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

உளுந்தூர்பேட்டையில் விவசாயிகள் சாலை மறியல்

உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகள், தாங்கள் கொண்டு வந்த தானியப் பொருட்களை, வியாபாரிகளின் சாக்குகளில் மாற்றக்கோரி வியாழக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு இவ்வட்டத்திற்குட்பட்ட நகர், மன்னார்குடி, சேந்தமங்கலம், வண்டிப்பாளையம், கணையார், குமாரமங்கலம், கெடிலம் உட்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் அறுவடை செய்த 5000-ம் நெல்மூட்டைகளையும், 1000 உளுந்து மூட்டைகளையும் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இவைகள் காலையில் எடை போட்டும் அதற்கான ரசீது மாலை வரை கொடுக்கப்படவில்லை. மேலும் சாக்குகள் மாற்றப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த சுமார் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் முன் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

தகவலறிந்த உளுந்தூர்பேட்டை போலீஸார் விரைந்து சென்று மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார். அதன்பேரில் விவசாயிகள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

கோவையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் வலியுறுத்தல்

கோவை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என, குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகி எஸ்.ஆறுச்சாமி பேசியது:

கோவையை அடுத்த மத்வராயபுரம் முண்டந்துறைப் பள்ளத்தில் 1997-இல் தடுப்பணை கட்டப்பட்டது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்து கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்தது. மேலும், வன விலங்குகளுக்கும் நீர் ஆதாரமாக

உள்ளது. 2010-இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் தடுப்பணையில் இரு இடங்களில் சேதம் ஏற்பட்டது. இதைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க கோவை மாவட்டக் குழு சார்பில் அளிக்கப்பட்ட மனுவில், "பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி இழப்பீடு வழங்குவதற்கு தமிழக அரசு காலம் தாழ்த்தி வருவது விவசாயிகளை வேதனை அடையச் செய்துள்ளது. தாமதம் இல்லாமல் இழப்பீடு தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளனர்.

திப்பம்பட்டி ஆறுச்சாமி பேசுகையில், "கோவை மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதால் குளம், குட்டைகள் வறண்டு விட்டன. வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடனை ரத்து செய்ய வேண்டும். தென்னை விவசாயிகளுக்கு கூடுதல் நஷ்டஈடு வழங்க வேண்டும்' என்றார்.

குறைதீர்க்கும் கூட்டத்தில் பேசிய விவசாயிகள் பலரும், வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

## "ஸ்பிரிங்லர்' முறையில் யானைகளுக்கு தீவனப்புல் வளர்ப்பு

சத்தியமங்கலம் பண்ணாரி வனத்தில் ஸ்பிரிங்லர் முறையில் யானைகளுக்கு தீவனப்புல் வளர்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் பெரும்பாலான குட்டைகள், ஏரிகள் வறண்டுவிட்டன. இதனால் யானைகள், மான்கள் உள்ளிட்ட வனவிலங்குகள் தீவனம், குடிநீர் தேடி கிராமத்துக்குள் புகுந்து விளைநிலங்களை நாசப்படுத்துகின்றன.

வனத்தையொட்டி சாலையோரங்களில் அகழிகள் வெட்டப்பட்ட போதிலும் யானைகள் ஊருக்குள் புகுந்துவிடுகின்றன. இதையடுத்து, யானைகளுக்குத் தேவையான தீவனம், குடிநீர் தேவையை நிறைவேற்றுவதற்காக சத்தி வனக்கோட்டத்தில் முதன்முறையாக ஸ்பிரிங்லர் முறையில் தீவனப்பயிர் சாகுபடிக்கு வனத்துறை அனுமதியளித்துள்ளது.

இதற்காக தமிழக வனத்துறை வன உயிரின பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, பண்ணாரி வனவியல் பண்ணையில் ஸ்பிரிங்லர் முறையில் வனத் தீவனப்பயிர் வளர்க்கும் பணியை வனச்சரக அலுவலர் எஸ்.சண்முகம்

புதன்கிழமை துவக்கி வைத்தார். அடர்ந்த காட்டுப் பகுதியில் ஆழ்குழாய் மூலம் வனக்குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. இதில் இருந்து நீர் இறைத்து தீவனப்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும்.

இதுகுறித்து சத்தி வனச்சரக அலுவலர் எஸ்.சண்முகம் புதன்கிழமை கூறியது:

சத்தி வனக் கோட்டத்தில் முதன்முறையாக 3 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே தீவனப்பயிர் வளர்க்கப்படும். இதற்காக பசும்புல் விதைகள் தூவும் பணி நடைபெறுகிறது. இது படிப்படியாக உயர்ந்து 20 ஏக்கர் வரை நீடிக்கும்.

இதன் மூலம் யானைகளுக்குத் தேவையான தீவனப்பயிர் இங்கு கிடைப்பதால், வனத்தையொட்டியுள்ள கிராமங்களில் யானைகள் புகுந்துவிடும் வாய்ப்புகள் குறைந்துவிடும் என்ற நம்பிக்கையில் இதனை செயல்படுத்துகிறோம் என்றார்.

ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக் கோரிக்கை

ஈரோடு மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் கருகி வருகின்றன. எனவே, ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என விவாசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் கணேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆட்சியர் பேசியது:

இந்தப் பகுதிகளில் விவசாயிகள் நெல், கரும்பு, மஞ்சள் ஆகிய பயிர்களை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். போதுமான பருவமழை இல்லாததால், பயிர்கள் கருகி வருகின்றன. பயிர்களைக் காப்பாற்ற அணைகளிலிருந்து உயிர் தண்ணீர் திறக்க வேண்டும்.சாய, தோல் ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பதால், வேளாண்மை உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமையான வறட்சி நிலவுவதால், ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றார்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் செ.நல்லசாமி, காளிங்கராயன் பாசன சபைத் தலைவர் வி.எம்.வேலாயுதம், தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் சுபி.தளபதி, மேட்டூர் மேற்குகரை பாசன விவாயிகள் சங்கத் தலைவர் மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இயற்கை எரிவாயு குழாய் பதிக்க விவசாயிகள் எதிர்ப்பு

தருமபுரி அருகே இயற்கை எரிவாயு குழாய் பதிக்க விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, அங்கு வியாழக்கிழமை போலீஸார் குவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கேரள மாநிலம், கொச்சியிலிருந்து தமிழ்நாடு வழியாக கர்நாடக மாநிலம், பெங்களூருக்கு இயற்கை எரிவாயுயைக் கொண்டு செல்ல மத்திய அரசுத் துறை நிறுவனமான "கெயில்' குழாய்களைப் பதித்து வருகிறது. தமிழ்நாட்டில் 336 கி.மீ. தொலைவு உள்பட மொத்தம் 840 கி.மீ. தொலைவுக்கு குழாய்கள் பதிக்க அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி வழியாக குழாய்கள் பதிக்கத் திட்டமிடப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் பங்குநத்தம் கிராமத்திலிருந்து அதியமான்கோட்டை கிராமம் வரையிலான இடைப்பட்ட பகுதியில் தற்போது குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதியமான்கோட்டை அருகே தேவர்ஊத்துப்பள்ளம் கிராமத்தில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அங்கு போலீஸார் குவிக்கப்பட்டனர். குழாய் பதிக்கும் பணியை தடுத்து நிறுத்த முயன்றனர். குழாய் பதிக்கும் பணியை விவசாயிகள் தடுக்க முற்பட்ட போது அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர். இதனால், விவசாயிகளுக்கும், போலீஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

விவசாயிகள் எதிர்ப்பு: இந்தத் திட்டத்தில் விவசாயிகள் நிலத்தில் குழாய்கள் பதித்தால், விவசாயம் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படும். மேலும், பதிக்கப்பட்ட குழாய்கள் அருகே கட்டடங்கள் கட்ட இயலாது என விதிமுறைகள் உள்ளன. இதனால், சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே, குழாய்கள் பதிக்கும் பணியை நெடுஞ்சாலை அருகே பதிக்க வேண்டும். எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதால், விவசாய நிலத்தில் குழாய்களைப் பதிக்க எதிர்ப்புத் தெரிவிப்பதாக விவசாயி சி.ராஜலிங்கம் (38) தெரிவித்தார்.

தேவர்ஊத்துப்பள்ளம் கிராமத்தில் குழாய் பதிக்க விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து, அங்கு குழாய் பதிக்கும் பணி சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. எதிர்ப்புத் தெரிவித்த விவசாயிகளை தருமபுரி துணைக் காவல் கண்காணிப்பாளர் த.அரசு சமாதானப்படுத்தினார்.

## நாமக்கல்லில் ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி ஏலம்

பருத்தி அறுவடை சீசன் தொடங்கியுள்ளதால், நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு பருத்தி வரத்து அதிகரித்தது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 6 ஆயிரம் பருத்தி மூட்டைகள் வரப்பெற்றிருந்தன. அன்றைய தினம் மட்டும் ரூ. ஒரு கோடிக்கு விற்பனை நடைபெற்றது.

நாமக்கல் - திருச்செங்கோடு சாலையிலுள்ள நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. நாமக்கல் மட்டுமன்றி அருகிலுள்ள திருச்சி, சேலம், பெரம்பலூர் மாவட்டங்களில் குளிர்கால பருத்தி அறுவடை சீசன் மும்முரமாக நடைபெற்று வருவதால் வாரம்தோறும் ஏலத்துக்கு பருத்தி மூட்டைகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 6,000 பருத்தி மூட்டைகள் வரப்பெற்றன.

அவற்றில் ஆர்சிஹெச் ரக பருத்திகள் குவிண்டால் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,500 முதல் ரூ.5,400 வரையும், சுரபி ரகம் ரூ.5,500 முதல் ரூ.6,000 வரையும் விலை போயின. மொத்தம் ரூ.ஒரு கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 4,700 மூட்டை பருத்திகள் வரப்பெற்றதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,500 முதல் ரூ.5,400 வரையும் விலை போயின.

தொடர்ந்து, அடுத்த வாரம் இன்னும் அதிகளவில் பருத்தி மூட்டைகள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏலத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர்.

வெல்லம் விலை சரிவுபரமத்தி

தற்போது விசேஷ காலம் இல்லாததால், பரமத்திவேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தைக்கு வெல்லம் வரத்து குறைந்தது. அதன் விளைவாக, விலையும் வீழ்ச்சியடைந்தது.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டத்தில் பிலிக்கல்பாளையத்தைச் சுற்றியுள்ள சோழசிராமணி, ஜமீன்இளம்பிள்ளை, ஜேடர்பாளையம், கபிலர்மலை, பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்படுகின்றன.

இங்கு விளையும் கரும்புகள் கபிலர்மலை, ஜேடர்பாளையம், சோழசிராமணி, பாண்டமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வெல்லம் காய்ச்சும் ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அச்சு, குண்டு வெல்லங்களாக தயார் செய்யப்படுகின்றன.

தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக கட்டப்பட்டு பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு உருண்டை வெல்லம் 30 கிலோ கொண்ட சிப்பம் ஒன்று ரூ.1,050-க்கும், அச்சு வெல்லம் ரூ.1,150-க்கும் ஏலம் போனது. ஆனால், புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.950-க்கும், அச்சு வெல்லம் ரூ.1,050-க்கும் ஏலம் போனது.

தற்பொழுது விஷேச காலங்கள் எதுவும் இல்லாததால் இந்த வெல்லம் விலை சரிவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மழைநீரை சேமிக்க நீர்நிலைகளை தூர்வார வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை

மழைநீரை சேமிக்கும் வகையில், நீர்நிலைகளை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் த. தியாகராஜன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பி. அய்யாக்கண்ணு (பாரதிய கிசான் சங்கம்): திருச்சி மாவட்டத்தில் நீர்நிலைகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

என். வீரசேகரன் (அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்கம்): காவிரியிலிருந்து ஆண்டுக்கு 11 மாதங்கள் தண்ணீர் பெறும் உரிமையுடைய 17 வாய்க்கால்களில் சுழற்சி முறையில் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூ. விசுவநாதன் (ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம்): வடகிழக்குப் பருவ மழை 550 மில்லி மீட்டர் பெய்தும், அரியாறு கோட்டத்தில் உள்ள 185 ஏரிகள், குளங்கள் ஒன்று கூட நிரம்பவில்லை. ஏரி, குளங்களை தூர்வார அரசு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

கவுண்டம்பட்டி சுப்பிரமணியன் (காவிரி டெல்டா விவசாயிகள் நலச் சங்கம்) : திருச்சியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து நிவாரண நிதியை பெற வேண்டும். நெல் மட்டுமல்லாது, வாழை, கரும்பு

உள்ளிட்ட பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

ராஜா சிதம்பரம் (தமிழக விவசாயிகள் சங்கம்): திருந்திய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் பயன் அனைத்து மாவட்டங்களுக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மானிய உதவிகள் ஆதார் அடையாள அட்டை மூலம் வழங்கப்படுமென மத்திய அரசு அறிவித்துள்ளது குறித்து விளக்கமளிக்க வேண்டும். கரும்புக்கான விலையை அரசு உயர்த்தி வழங்க வேண்டும்.

அயிலை சிவ. சூரியன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): திருச்சி மாவட்டம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். மழைக்காலங்களில் தண்ணீரை சேமிக்க அனைத்து ஏரி, குளங்களையும் நீர்வரத்து வாய்க்கால்கள், வடிகால்களை தூர்வார வேண்டும்.

புலியூர் நாகராஜன் (காங்கிரஸ் விவசாயப் பிரிவு): விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் வேளாண் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். ஜப்தி நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

சி. மாசிலாமணி (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியிலிருந்து நிதியைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் குறித்து பேசினர்.

"நீர்நிலை ஆக்கிரமிப்புகள் விரைந்து அகற்றப்படும்'

திருச்சி மாவட்டத்தில் நீர்நிலைகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் விரைந்து அகற்றப்படும் என்றார் மாவட்ட வருவாய் அலுவலர் த. தியாகராஜன்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் ஏற்கெனவே பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. அகற்றப்பட்ட இடங்களில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் செய்யப்படுவதாக விவசாயிகள் இங்கு தெரிவித்துள்ளனர். இது குறித்து விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். தேவையெனில் காவல்துறை மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் தெரிவிக்கும் கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தொடர்புடைய விவசாய சங்கத்துக்கு கடிதம் மூலம் அதிகாரிகள் தகவல் தெரிவிக்க வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு என்ற நிலையே ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

வேளாண் இணை இயக்குநர் ஜெ. சேகர் பேசியது: வழக்கமான பயிர் காப்பீட்டுத் திட்டம் பிர்கா அளவில் மதிப்பீடு செய்யப்படுகிறது. திருந்திய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வருவாய் கிராம அளவில் மதிப்பீடு செய்யப்படும். இதற்கு கட்டப்படும் பிரீமியத் தொகையும் அதிகம்.

தற்போது குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதன் பின்னரே அனைத்து மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.கூட்டத்தில், தமிழ்நாடு மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் முத்தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மேட்டூர் அணை நீர்மட்டம்: 34.63 அடி

மேட்டூர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 34.63 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 339 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

## டெல்டாவில் ஏகபோக கொள்முதல் தடுக்க வர்த்தக சங்கம் ஆர்ப்பாட்டம்

கும்பகோணம்: டெல்டா மாவட்டங்களில் ஏகபோக நெல், அரிசி கொள்முதலை தடை செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

டெல்டா மாவட்டங்களில் ஏகபோக நெல், அரிசி கொள்முதலை தடை செய்ய வலியுறுத்தி, கும்பகோணம் காந்தி பார்க் முன் வர்த்தக சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில், தஞ்சை மாவட்ட நெல் அரிசி வியாபாரிகள் சங்க செயலாளர் சேகர் தலைமை வகித்து பேசியதாவது:

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில், பாசனத்துக்கு உரிய காலத்தில் தண்ணீர் இல்லாதபோதும், மழை இல்லாத நிலையிலும், மும்முனை மின்சாரம் இல்லாமல்

கடுமையான போராட்டத்துக்கு இடையே, விவசாயிகள் பம்புசெட்கள் மூலம் சம்பா நெல் சாகுபடி செய்துள்ளனர். முன்பட்ட சம்பா அறுவடை நடந்து வரும் நிலையில், பல இடங்களில் லாரிகளை கொண்டு வந்து, நேரடி நெல் கொள்முதல் செய்ய துவங்கிவிட்டனர். வியாபாரிகள், விவசாயிகளிடம் இருந்து நேரிடையாக, ரிலையன்ஸ் நிறுவனம் ஏகபோக கொள்முதல் செய்து, நெல்லை பதுக்கி வைக்க திட்டமிட்டுள்ளனர்.

இதன் மூலம் செயற்கையான அரிசி தட்டுப்பாடும், விலை ஏற்றமும் நடந்து வருகிறது. எனவே ஏகபோக நெல், அரிசி கொள்முதல், அளவுக்கு அதிகமாக பதுக்கி வைப்பதை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வணிகர் சங்க பேரவை மாவட்ட தலைவர் கணேசன், செயலாளர் முருகேசன் முன்னிலை வகித்தனர். தொகுதி செயலாளர் முத்துராஜா, இந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு கழக மாநில பொறுப்பாளர் திருவேங்கடம் மற்றும் வர்த்தக சங்க பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். துணைத்தலைவர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

அன்னிய நேரடி முதலீட்டை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும், உணவு தர நிர்ணய சட்டத்தை முறைப்படுத்த வேண்டும், வால்மார்ட் நிறுவனம் சென்னையில் கட்டடங்கள் கட்டுவதை நிறுத்த வேண்டும், அரிசி விலை ஏற்றத்துக்கு மிக முக்கிய காரணமான, ஏகபோக கொள்முதலை தடுக்க வேண்டுமென வலியுறுத்திம் ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டது.

## கரும்பு அரவைக்கான இந்த ஆண்டு இலக்கு குறைப்பு : விளைச்சல் பாதிப்பால் ஆலை நிர்வாகம் முடிவு

திருத்தணி : போதிய மழை இல்லாதது, மின்தடை மற்றும் கரும்பு விளைச்சல் குறைவு ஆகிய காரணங்களால், ஆலை நிர்வாகம் நிர்ணயித்த, 4.50 லட்சம் டன் கரும்பு அரவை இலக்கை விட, ஒன்றரை லட்சம் டன்னை ஆலை நிர்வாகம் குறைத்து உள்ளது.

கடந்த ஆண்டை போல், இந்தாண்டும், உரிய இலக்கை எட்ட முடியாமல் நிர்வாகம் திணறி வருகிறது.

திருவாலங்காட்டில், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இங்கு, 278 நிரந்தர தொழிலாளர்கள், 21 அலுவலக ஊழியர்கள், 220 தினக்கூலி ஊழியர்கள் என, மொத்தம், 500 பேர் வேலை செய்து வருகின்றனர்.

2,500 டன் கரும்பு அரைப்பு

இந்த ஆலைக்கு திருத்தணி, அத்திமாஞ்சேரிபேட்டை, ஆர்.கே.பேட்டை பள்ளிப்பட்டு, திருவாலங்காடு, சாலை அரக்கோணம், கனகம்மாசத்திரம் மற்றும் திருவாலங்காடு ஆகிய பகுதிகளில் இருந்து, 35 ஆயிரம் விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட கரும்புகளை கொண்டு வருகின்றனர். இதில், 15 ஆயிரம் விவசாயிகள் ஆலையின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

ஆலையில் உள்ள இயந்திரங்கள் நாள் ஒன்றுக்கு, 2,300 டன் முதல், 2,500 டன் கரும்பு வரை அரைக்கும் திறன் கொண்டவை.

இயந்திரத்தில் அடிக்கடி ஏற்படும் கோளாறு மற்றும் பராமரிப்பு பணிகள் காரணமாக, தற்போது நாள் ஒன்றுக்கு, 2,000 முதல், 2,200 டன் கரும்பு அரவை செய்யப்படுகிறது. ஒரு டன் கரும்புக்கு, 2,250 ரூபாய் வழங்கப்படுகிறது.

பயிருக்கு கடன்

இதுதவிர, கரும்பு வெட்டுவதற்கு ஆலை நிர்வாகம், விழுப்புரம், கடலூர், புதுச்சேரி, ஆந்திர மாநிலம் நெல்லூர், விசாகபட்டினம் ஆகிய இடங்களில் இருந்து, கூலி ஆட்களை வரவழைத்து தேவைப்படும் விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கிறது.

கரும்பு வெட்டுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் முன்பணம், கரும்பு பயிரிடுவதற்கு, வங்கிகள் மூலம் கடனுதவி மற்றும் தேவையான உரங்கள் ஆகியவையும் ஆலை நிர்வாகம் வழங்குகிறது.

அரவை பருவம்

கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கடந்த ஆண்டு அக்.,22ம் தேதி கரும்பு அரவை துவங்கியது. 3 ஷிப்ட்டுகள் மூலம், கரும்பு அரவை செய்யப்படுகிறது. இந்தாண்டு,

4.50 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய ஆலைய நிர்வாகம் இலக்கு நிர்ணயித்தது. ஆனால், போதிய பருவமழை, மின்தடை மற்றும் கரும்பின் ஈரப்பதம் குறைவு மற்றும் விளைச்சல் குறைவால், நிர்ணயித்த இலக்கு எட்ட முடியுமா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

வரும் ஏப்ரல் மாதம், முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் கரும்பு அரவை நிறுத்தப்படும்.

இலக்கு குறைப்பு

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத கூட்டுறவு சர்க்கரை ஆலை அலுவலர் ஒருவர் கூறியதாவது:

பருவ மழை இல்லாததாலும், அடிக்கடி ஏற்படும் மின்தடையாலும் கரும்பு பயிருக்கு தேவையான தண்ணீர் பாய்ச்சாமல், அதன் ஈரப்பதம் குறைந்து உள்ளது. சில விவசாயிகளின் கிணறுகளில் தண்ணீர் வற்றியதால் கரும்பு பயிர் செய்யவில்லை. சில விவசாயிகளிடம், விஷமிகள் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஓட்டினால், உரிய நேரத்தில் பணம் கிடைக்காது, சரியான நேரத்தில் கரும்பு வெட்டுதற்கு ஆர்டர் தரமாட்டார்கள் என, வீண் வதந்திகளை பரப்பிவிட்டு, பள்ளிப்பட்டு அருகே உள்ள ஆந்திர மாநில தனியார் சர்க்கரை ஆலை, காஞ்சிபுரம் அருகே உள்ள தனியார் ஆலைக்கு ஓட்டுவதற்கு மறைமுகமாக செயல்படுகின்றனர்.

மேற்கண்ட காரணத்தால், இந்தாண்டு நிர்ணயித்த கரும்பு அரவையின் இலக்கு குறைந்து, தற்போது, 3 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிட்டு உள்ளோம். தற்போது, 1.68 லட்சம் டன் கரும்பு தான் அரவை செய்து உள்ளோம். மீதமுள்ள கரும்பு அரவையை, ஏப்ரல் முதல் வாரத்திற்குள் அரைத்து முடிக்க வேண்டும் என, உறுதியாக உள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன்: விற்பனைக்குழு செயலர் தகவல்

விருத்தாசலம் : மார்க்கெட் கமிட்டியில், விவசாயிகள் வேளாண் விளை பொருட்களை அடமானம் வைத்து, குறைந்த வட்டியில் கடன் பெறலாம் என

விற்பனைக்குழு செயலர் அரிதாஸ் தெரிவித்துள்ளார்.
விருத்தாசலம் கம்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம் பகுதிகளில் தற்போது சம்பா நெல் அறுவடை செய்யும் பணி துவங்கியுள்ளது. இதனால் விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு தினமும் நெல் வரத்து அதிகரித்து வருகிறது. கமிட்டியில் இடப்பற்றாக்குறை, சாக்கு பற்றாக்குறை, ஆள் பற்றாக்குறை, வியபாரிகள் வாங்கிய நெல்லை உடனே எடுத்துச் செல்லாமல் வாரக்கணக்கில் தேக்கி வைத்திருப்பது போன்ற காரணங்களால் நெல் மூட்டைகள் தேக்கமடைகின்றன.
நேற்று வரத்து அதிகமிருந்ததால், 20 ஆயிரம் நெல் மூட்டைகள், 2 ஆயிரம் மக்காச்சோள மூட்டைகள் கொள்முதல் செய்யாமல் இன்று (1ம் தேதி) கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இடப் பற்றாக்குறையால், விவசாயிகள் இன்று நெல்லை எடுத்து வரவேண்டாம் என அறிவித்து, கேட் மூடி வைக்கப்பட்டுள்ளது.
விற்பனைக்குழு செயலர் ஹரிதாஸ் கூறுகையில், "சம்பா அறுவடை துவங்கியுள்ளதால் தினசரி 20 ஆயிரம் நெல் மூட்டைகள் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. கமிட்டியில் ஆள் மற்றும் இடப்பற்றாக்குறையால் சிரமம் ஏற்படுகிறது.
விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை, உலர வைத்து, சுத்தமாக எடுத்து வந்தால் கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால் விவசாயிகள் அவசர பணத் தேவைக்காக, அறுவடை செய்த நெல்லை ஈரப்பதத்துடன் எடுத்து வருகின்றனர்.
மார்க்கெட் கமிட்டியில், விவசாயிகளுக்கு 5 சதவீத வட்டியுடன், 2 லட்சம் ரூபாய் வரை பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள், விளை பொருட்களை எடுத்து வந்து, ஆறு மாதம் வரை அடமானம் வைத்து கடன் பெற்றுக்கொள்ளலாம். கொள் முதல் விலை உயரும்போது விற்று பயனடையலாம்' என்றார்.

## கடலூர், விருத்தாசலம் கமிட்டிகளில் ரூ.67.8 லட்சத்தில் காய்கறி, பழங்களை பாதுகாக்க குளிர்சாதன கிடங்குகள்

விருத்தாசலம் : காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட வேளாண் விளை பொருட்களை கெடாமல் பாதுகாக்க, கடலூர், விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிகளில், 67.8 லட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்சாதன கிடங்குகள் அமைக்கப்பட உள்ளது.
கடலூர் மாவட்டத்தில் கத்தரி, வெண்டை, அவரை, பீர்க்கன், வெள்ளரி, புடலை, மிளகாய், மல்லி மா, பலா, முந்திரி, வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது.
விளைந்த காய்கறிகள், பழங்களை அறுவடை செய்து, சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.
அதைத் தொடர்ந்து காய்கறிகள், பழங்களை பாதுகாக்க குளிர்சாதன குடோன்கள் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்ததையேற்று, கடலூர், விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிகளில், 67.8 லட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்சாதன கிடங்குகள் அமைக்கப்பட உள்ளது.
கடலூர் மாவட்ட விற்பனைக்குழு செயலர் ஹரிதாஸ் கூறுகையில்,
"விருத்தாசலத்தில் 1 லட்சம் வேளாண் விளை பொருள் மூட்டைகள் வைக்கும் வசதியுள்ளது. ஆனால் காய்கறிகள், பழங்கள், மல்லி, பருப்பு, மிளகாய் உள்ளிட்டவைகளை பாதுகாக்க குளிர்சாதன கிடங்கு வசதி இல்லை.
விவசாயிகள் கோரிக்கையையேற்று, மாவட்டத்தில் கடலூர், விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிகளில் தலா 33.9 லட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்சாதன கிடங்குகள் அமைக்க திட்டமிட்டுள்ளது.
இதில், சீசன் காலங்களில் காய்கறி, பழங்களை பாதுகாக்கவும், மற்ற நேரங்களில் தேவைப்படுவோர் கட்டண அடிப்படையில் புளி, காய்கறி, பழங்கள், மிளகாய், மல்லி உள்ளிட்ட பொருட்களை வைத்து பயனடையலாம். இதில், 25 டன் வேளாண் விளை பொருட்களை வைப்பதற்கு தேவையான வசதிகள் இருக்கும்' என தெரிவித்தார்.

## "கொடி வகை காய்கறி பயிரிட்டால் அதிக லாபம்':தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்

வாலாஜாபாத் : தோட்டக்கலை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, கொடி வகை காய்கறிகளை பயிரிட்டு, அதிக லாபம் பெறலாம் என, தோட்டக்கலை உதவி இயக்குனர் அனிலாகிங்ஸி தெரிவித்தார்.அவர் கூறியதாவது:கொடி வகை பயிர்களான பாகற்காய், புடலங்காய், பீர்க்கன் காய் வகை காய்கறி பயிர்கள் செய்யலாம். தற்போது பாகற்காயில் விவேக், அபிஷேக், ப்ரித்தி ஆகிய ரக விதைகள், புடலங்காய் கோ-1, கோ-2, பிகேஎம்-1, எம்டியு பிஎல்ஆர்(எஸ்ஜி-1) ஆகிய ரக விதைகள், பீர்க்கன்காய் கோ-1, கோ-2, அர்கா சுமீத் மற்றும் அர்கா சுஜாத் ஆகிய ரக விதைகளை விதைக்கலாம்.தொழு உரம்நிலங்களை நன்கு உழவு செய்து சமன் செய்த பின், 2.5 அடி அகலத்திற்கு இரண்டுமீட்டர் நீளம் இடைவெளியில் குழிகளை தோண்ட வேண்டும். இவற்றில், 30க்கு 30 செ.மீ., அளவில் ஆழம் இருக்கும் அளவிற்கு குழிகள் அமைத்து, 10 நாட்கள் ஆறப்போட வேண்டும். ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம், 10 கிலோ இட வேண்டும். மேலும் அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்கிற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து கலவையை, 100 கிராம் அளவிற்கு இட வேண்டும். பூ பூக்கும் தருணத்தில்

ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழை சத்தை இடவேண்டும். 24 மணி நேரம்...பாகற்காய் விதை ஒரு எக்டருக்கு 4.5 கிலோ, புடலங்காய் விதை 1.5 கிலோ, பீர்க்கன்காய் விதை 1.5 கிலோ விதைகளை, ஒரு கிலோ விதைக்கு கேப்டான் அல்லது திரம் மருந்து 2 கிராம் என்ற அளவிற்கு கலந்து 24 மணி நேரம் வைத்த பின், விதைக்க வேண்டும்.

ஒரு குழியில், நான்கு விதைகள் விதைக்க வேண்டும். நன்கு வளர்ந்தவுடன், குழிக்கு இரண்டு செடிகள் வீதம் விட்டு, மீதம் உள்ள செடிகளை நீக்கி விட வேண்டும். விதைகள் முளைக்கும்

வரையில் தண்ணீர் வாரம் ஒரு முறை பாய்ச்ச வேண்டும்.

பின்னர் களை நீக்க வேண்டும். கொடி படர, மூங்கில் தட்டிகள் 2 மீட்டர்

உயரத்திற்கு அமைக்க வேண்டும். இவற்றில் கொடி படருமாறு செய்ய வேண்டும். எத்ரல் கரைசலை இரு

இலைகள் விட்ட பின், வாரம் ஒரு முறை தெளித்தால் ஆண் பூக்கள் எண்ணிக்கை

குறைந்து, பெண் பூக்கள் அதிகரிக்கும்.

இவற்றில், புடலங்காய்க்கு ஒரு மில்லி எக்ரல் 10 லிட்டர் நீரிலும், ஏனைய

பயிர்களுக்கு 2.5 மி.லிட்டர் மருந்தை 10 லிட்டர் நீரிலும் கலக்க வேண்டும்.

சாம்பல் நோய் கட்டுப்படுத்த டை நோ காபர் ஒரு மில்லி அல்லது கார்பன்டைசிம் 0.5 கிராம் மருந்தை, ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

அடி சாம்பல் நோய் கட்டுப்படுத்த மான்கோசெப் அல்லது குளோரோதளானில் இரண்டு கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 10 நாட்கள் இடைவெளி விட்டு தெளிக்க வேண்டும்.

60 நாட்களில் அறுவடை

இந்த நுட்பத்தில் பாகற்காய் மற்றும் பீர்க்கன்காய்களை 60 நாட்களில் இருந்து ஒரு வாரம் வரையில் அறுவடை

செய்யலாம்.

புடலங்காய் 80 நாட்களில் இருந்து அறுவடை செய்யலாம். இவற்றின் மூலம் 14

டன் பாகற்காய், 18 டன் புடலங்காய்,

14 டன் பீர்க்கங்காய் அறுவடை செய்யலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சர்க்கரை ஆலை இயங்காததால் கரும்பு விவசாயிகள் கொதிப்பு : இயந்திரங்களை பழுது பார்க்காததே காரணம் என புகார்**

மதுராந்தகம் : படாளம் சர்க்கரை ஆலையில், இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால்,

கரும்பு அரவை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால், 15 ஆயிரம் டன்

கரும்புகள் காய்ந்து, வீணாகி வருவதால், விவசாயிகள் கடுமையாக

பாதிக்கப்பட்டுள்ளனர். 1,250 டன் அரவை திறன்

மதுராந்தகம் அடுத்த படாளத்தில், கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது.

இது, 1961ம் ஆண்டு திறக்கப்பட்டது. நாள் ஒன்றுக்கு, 750 டன் அரவை செய்யும் திறன் கொண்டதாக இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு, நாள் ஒன்றுக்கு, 1,250 டன் அரைவைத் திறன் கொண்டதாக மாற்றப்பட்டது. அதன்பின், 1976ம் ஆண்டு, ஆலை மீண்டும் விரிவாக்கம் செய்யப்பட்டு, 1,750 டன் அரவைத்திறன் கொண்டதாக மாற்றப்பட்டது. விரிவாக்கத்திற்கு பிறகு, 2,000 டன் வரை கரும்பு அரைக்கப்பட்டது. அதன்பிறகு மத்திய அரசின் உத்தரவின்படி, சர்க்கரை ஆலை, 2,500 டன் அரவைத் திறன் கொண்டதாக மாற்றப்பட்டது. கடந்த, 2002ம் ஆண்டு நிர்வாக சீர்கேடு காரணமாக, ஆலை இழுத்து மூடப்பட்டது. மீண்டும் திறப்பு ஆலையை திறக்க வேண்டும் என, விவசாயிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடந்தது. அதன் பயனாக, கடந்த 2010ம் ஆண்டு, ஆலை புனரமைப்புக்கு அரசு, 35 கோடி ரூபாய் ஒதுக்கியது. ஆலை சீரமைக்கப்பட்டு, 2011ம் ஆண்டு பிப்ரவரி முதல் மே வரை, ஆலையின் முதல் அரவை துவக்கியது. முதல் அரவையில், 76 ஆயிரம் டன் கரும்புகள் அரைக்கப்பட்டன. அதன் மூலம், 45 ஆயிரம் டன் வரை சர்க்கரை கிடைத்தது. கடந்த 2012 ஜனவரியிலிருந்து கடந்த மாதம் 23ம் தேதி வரை, அரவை இல்லாததால், இயந்திரங்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணியை தனியார் நிறுவனத்தினர் மேற்கொண்டனர்.

இயந்திரங்கள் பழுது

கடந்த மாதம் 23ம் தேதி, மீண்டும் ஆலை அரைக்கும் பணி துவங்கியது. ஆலை செயல்படத் துவங்கிய அன்று, ஸ்பிரே பாண்ட் என்ற பாகம் உடைந்து விழுந்தது. இதனால், அன்று அரவை பணி நிறுத்தப்பட்டது. அதை சரி செய்த பிறகு, மீண்டும் இயந்திரம் இயக்கப்பட்டது. அப்போது, கரும்பு சாறு செல்லும் பகுதியிலிருந்த மின் ஒயர் பழுதடைந்தது.

அவ்வப்போது இயந்திரம் பழுதடைவதால், கரும்பு அரவை பாதிக்கப்படுகிறது. தற்போது, 15 ஆயிரம் டன் கரும்பு வெட்டப்பட்டு, அரவைக்காக காத்துக்

கொண்டிருக்கிறது. பழுது பார்க்கும் பணி முறையாக நடைபெறாததே, இப்பிரச்னைக்கு காரணம் என, குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து, அனைத்து விவசாய சாகுபடி பயிர்கள் உற்பத்தி விவசாய சங்கத் தலைவர் திருவேங்கடம் கூறியதாவது:
அரவை இல்லாத காலத்தில், இயந்திரங்களில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய வேண்டும். இப்பணி தனியாரிடம் விடப்படுகிறது. அவர்கள் முறையாக பணி செய்யாததால், இயந்திரங்கள் முழுத்திறனுடன் செயல்படுவதில்லை.
இதனால் கரும்புகளுடன் லாரிகள் காத்திருக்க வேண்டியுள்ளது. பல நாட்கள் கரும்பு இறக்கப்படாததால், அவை காய்ந்து போகின்றது. லாரி வாடகை அதிகரிக்கிறது. கால விரயம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

நிலத்தில் வீணாகும் கரும்புகள்
படாளம் சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை தாமதமாவதால், நிலத்தில் வெட்டப்பட்ட கரும்புகள் வீணாகின்றன. இதுகுறித்து மதுராந்தகம் வட்டம், நெடுங்கல் கிராமத்தை சேர்ந்த விவசாயி குப்புசாமி, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள மனுவில், ""கூலியாட்கள் பிரச்னை, மின்சாரம் பற்றாக்குறை, இயற்கை சீற்றம் என, அனைத்தையும் சமாளித்து விளைவிக்கப்பட்ட கரும்பு, வெட்டப்பட்டு ஆறு நாட்களாகியும், அரவைக்கு எடுத்து செல்ல முடியவில்லை. கரும்பு நிலத்திலே காய்ந்து வருகிறது. இதனால், மிகுந்த நஷ்டம் ஏற்படும். எனவே, கரும்பை அரவைக்கு எடுத்துக்கொள்ள உதவ வேண்டும்," என குறிப்பிட்டுள்ளார்.

நான்கு ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி அளவு

ஆண்டு இலக்கு உற்பத்தி

(டன்னில்)

2008-2009 2.03 லட்சம் 1.59 லட்சம்

2009-2010 1.10 லட்சம் 90 ஆயிரம்

2010-2011 1.50 லட்சம் 1.65 லட்சம்

2011-2012 3.15 லட்சம் 2.56 லட்சம்

2012-2013 4.50 லட்சம் 3 லட்சம்*

*தற்போது, 3 லட்சம் டன்னாக குறைக்கப்பட்டு உள்ளது, ஜனவரி மாதம் முடிய, 1.68 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு உள்ளது

**வெள்ளாட்டை தாக்கும் பி.பி.ஆர்., நோய் தடுப்பூசி போட டாக்டர்கள் அறிவுரை**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் வெள்ளாடுகளை தாக்கும் பி.பி.ஆர்., நோய் தாக்கும் அபாயம் உள்ளதாகவும், வெள்ளாடுகளுக்கு தடுப்பூசி போடவும் கால்நடை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் யசோதை கூறியதாவது:

ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் வெள்ளாடுகளை தாக்கும் வைரஸ் கிருமியால், பி.பி.ஆர்., நோய் தாக்க வாய்ப்புள்ளது. போலி வெக்கை நோய் என்று இந்நோய் அழைக்கப்படுகிறது. வெள்ளாட்டின் ஆயுட்காலத்தை குறைப்பதுடன், இளங்குட்டியின் இறப்புக்கும் காரணமாகிறது.

இந்நோய் தாக்கிய ஆடுகளுக்கு, ஆறு முதல், எட்டு நாட்கள் வரை காய்ச்சல் இருக்கும். வாயில் புண், கண், மூக்கில் இருந்து நீர் வடிதல், வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

நோயால் பாதிக்கப்பட்ட ஆடுகளை, மற்ற ஆடுகளிடம் இருந்து பிரித்து வைக்க வேண்டும். தடுப்பூசி போடுவதால் மட்டுமே, வெள்ளாடுகளை பி.பி.ஆர்., நோயில் இருந்து காக்க முடியும். எனவே, தடுப்பூசி போட்டு, வெள்ளாடுகளை பி.பி.ஆர்., நோயில் இருந்து காக்க, ஈரோடு கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

85 சதவீத பணப்பற்றை விவசாயிகளுக்கு வழங்குகிறோம்

ஈரோடு: சர்க்கரை ஆலையின் பணப்பற்றில், 85 சதவீதத்தை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிடவும், 15 சதவீத பணப்பற்றை ஆலை செலவீனங்களுக்கு பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகிகள், கலெக்டரிடம் தெரிவித்தனர்.
ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நேற்று நடந்தது. டி.ஆர்.ஓ., கணேஷ், ஆர்.டி.ஓ., சுகுமார், வேளாண்துறை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விவசாயிகள் சங்கத்தினர், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.
கூட்ட விவாதம் வருமாறு:
ஈரோடு மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளுக்கு, சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், கடந்த 2011 - 12ம் ஆண்டுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகை, 96 கோடி ரூபாயாகும். ஆறு கோடி ரூபாயை ஆலை நிர்வாகம் வழங்கியுள்ளது. 90 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. தவிர கடந்த, 15 நாட்களாக நடப்பாண்டுக்கான கரும்பு வெட்டப்பட்டு வருகிறது.
வங்கியில் வாங்கிய கடனுக்காக, பணத்தை திருப்பி செலுத்தும்படி விவசாயிகளுக்கு வங்கி நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. பணத்தை உடனே கேட்பதை தவிர்க்க, ஆலை நிர்வாகம், 14 மாதம் ஆகிய நிலையில், முழு வளர்ச்சியடைந்த கரும்பை வெட்ட மறுத்து தாமதப்படுத்தி வருகிறது.
கடந்த முறை முத்தரப்பு கூட்டத்தில் ஆலை நிர்வாகம், நிலுவைத் தொகையை வழங்கிட, 15 நாட்கள் அவகாசம் கோரினர். 45 நாட்கள் ஆன நிலையில், கண்டுகொள்ளாமல் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.
முத்தரப்பு கூட்டத்தின் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை விலக்கிக்கொள்ளவும், கரும்புகளை விவசாயிகள் யாருக்கு விற்கவும், 90 கோடி ரூபாய் நிலுவை தொகையை, ஒப்பந்தப்படி வழங்க மறுக்கும் ஆலை நிர்வாகம் மீது, கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி விவசாயிகள் சங்கத்தினர் கடும்

குற்றச்சாட்டை தெரிவித்தனர்.
கலெக்டர் சண்முகம் கூறியதாவது:
முத்தரப்பு கூட்டத்தில் ஆலை நிர்வாகத்துக்கு அவகாசம் வழங்கப்பட்டது.
தற்போது விவசாயிகளுக்கு வங்கிகளில் இருந்து நோட்டீஸ் வந்த நிலையில்,
நிலைமை சீரியஸாக மாறியுள்ளது.

மழை, தண்ணீரின்றி விவசாயிகள் பாதித்துள்ள நிலையில், கரும்பு
விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகத்தின் இறுதிக்கட்ட பதில் எதிர்பார்க்கப்படுகிறது.
தாங்கள் தெரிவிக்கும் பதிலுக்கு ஏற்ப, நாளை (இன்று) மாவட்ட நிர்வாகம் மூலம்,
ஆலைக்கு கடிதம் மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது. இறுதி பதிலையும்
ஆலை நிர்வாகம், நிறைவேற்ற மறுத்தால், அடுத்து சட்டப்படியான நடவடிக்கை
எடுக்கப்படும், என்றார்.
சக்தி சர்க்கரை ஆலை நிர்வாக அதிகாரி பாஸ்கர் கூறியதாவது:
கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்குவதே, ஆலை நிர்வாகத்தின்
முதல் பணியாக கொண்டுள்ளது. விவசாயிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின்
கோரிக்கையை ஏற்று, ஆலை நிர்வாகம், தனது பணப்பற்றில், 85 சதவீத்தை
கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிடவும், ஆலை தொடர்ந்து நடக்க, மீதம், 15 சதவீத
பணப்பற்றை பயன்படுத்திட முடிவு செய்துள்ளது.
வங்கிகள் விவசாயிக்கு அனுப்பிய நோட்டீஸ்களை, ஒரு வாரத்துக்குள் ஆலை
நிர்வாகம் சரி செய்யும். தவிர, இனி மேல் இதுபோன்ற வங்கி நோட்டீஸ்கள்
விவசாயிகளுக்கு வராமலும், நிலுவைத் தொகை, 20 கோடி ரூபாயில், ஃபிப்ரவரி
மாதம், 10 கோடியும், மார்ச் மாதம், 10 கோடியும் வங்கிகளில் செலுத்தப்படும்,
எனக்கூறினார்.
ஆலை நிர்வாகத்தின் இந்த முடிவை விவசாயிகள் தரப்பில் ஏகமனதாக
ஏற்றுக்கொண்டதாக அறிவித்தனர். இதுபற்றிய சந்தேகங்கள் இருப்பின்,
இடைப்பட்ட காலத்தில் விவசாயிகள் தலைமையில் ஆலோசனை கூட்டம்
நடத்தலாம், என கலெக்டர் தெரிவித்தார்.

போர்வெல் பாசன சாகுபடி நெல் அறுவடை தீவிரம்

கோபிசெட்டிபாளையம்: போர்வெல் பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. விளைச்சல் குறைவால் நெல் கிலோவுக்கு, 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தின் மிகப்பெரிய அணையாக உள்ள பவானிசாகர் அணையில் திறக்கப்படும் தண்ணீர், கோபி அருகே கொடிவேரியில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. தடப்பள்ளியில், 17 ஆயிரத்து, 658 ஏக்கர் நிலமும், அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலம், 6,850 ஏக்கர் நிலம் என மொத்தம், 24 ஆயிரத்து 508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மொத்தமுள்ள, 24 ஆயிரம் ஏக்கரில், 15 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் கடந்தாண்டு முதல் போகத்தில் மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. முதல்போக நெல் அறுவடை பணி முடிந்த கையோடு, அடுத்த போகத்துக்கான பணி மும்முரமாக நடக்கும். பருவ மழை பொய்த்ததால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்தது. இதனால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

மழையின்மையால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே செல்கிறது. பாசனப்பகுதிகளில் போர்வெல் மூலம், கிணற்று பாசனத்தின் மூலம் சில விவசாயிகள் நெல் நடவு செய்தனர். பெரும்பாலான விவசாயிகள், விளை நிலங்களை மானாவாரியாக விட்டுள்ளதால், பசுமையான இருந்த நிலங்கள் வறண்டு காணப்படுகிறது. நெல் சாகுபடி செய்த நிலங்கள் முழுவதும் தற்போது ஆடு, மாடுகளின் மேய்ச்சல் நிலங்களாக காணப்படுகிறது.

போர்வெல், கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் அறுவடை பணியில் சில விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகள் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் முதல்போக நெல் அறுவடை முடிந்த கையோடு, இரண்டாம் போகத்துக்காக உழவு பணி, சமன்படுத்துதல் பணிகள் செய்வோம். தயாராக வைத்திருக்கும் நாற்றுகளை நடவு செய்வோம். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் ஆண்டு முழுவதும் நெல் சீஸனாக காணப்படும். சென்ற ஆண்டு பருவ மழை பொய்த்ததால் முதல் போக சாகுபடி மட்டுமே செய்யப்பட்டது. இரண்டாம் போகத்தில் நெல் நடவு செய்யவில்லை.

போர்வெல், கிணற்று பாசனத்தில் ஏ.டி.டி., 43 ரக நெல் நடவு செய்யப்பட்டது. பாசனம் மூலம் நெல் நடவு செய்தால், மூன்றரை ஏக்கருக்கு, 46 பொதி கிடைக்கும். போர்வெல் பாசனத்தில் நடவு செய்ததால், 15 முதல், 20 பொதி நெல் விளைச்சலாகி உள்ளது. 435 ரூபாய்க்கு விற்கப்பட்ட டி.ஏ.பி., உரம் மூட்டை, 1,265 ரூபாயாகாவும், கூலி ஆட்கள் கூலி உயர்வு 60 சதவீதம் வரையும், இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்ய ஒரு மணி நேரம், 1,200 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

நெல் விளைச்சல் குறைவால், அரசு விதை நெல் உற்பத்தியாளர்கள் நேரடியாக வந்து, நெல்லை வாங்கி செல்கின்றனர்.

சென்ற ஆண்டு விதை நெல் ஒரு கிலோ, 17 ரூபாய்க்கு வாங்கினர். நடப்பாண்டு ஒரு கிலோ விதை நெல் 27 ரூபாய்க்கு வாங்குகின்றனர்.

4,600 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு பொதி நெல் நடப்பாண்டு, 6,500 முதல், 7,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. நெல் விலை உயர்ந்திருந்தபோதிலும், விளைச்சல் பாதிப்பால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நீரின்றி இறந்த தென்னை மரம் முள்ளாம்பரப்பில் பரிதாபம்

ஈரோடு: ஈரோடு முள்ளாம்பரப்பில் வறட்சியால் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் வாடியதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இந்தியளவில் தேங்காய் உற்பத்தியில் கேரள மாநிலம முன்னோடியாக திகழ்கிறது. கேரளாவில், 36.89 சதவீதம் தென்னை சாகுபடியும், தமிழகத்தில், 34.11 சதவீதமும்,

கர்நாடகா, 13.83 சதவீதமும் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழகத்தில், கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, நெல்லை, கிருஷ்ணகிரி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக பரப்பில் விவசாயிகள் தென்னை சாகுபடி செய்கின்றனர்.

நடப்பாண்டு, வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், குறுவை சாகுபடி பாதித்துள்ளது. அணைகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் போன்றவற்றில் நீர்மட்டம் குறைந்ததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு அடுத்த முள்ளாம்பரப்பில் பல நூறு ஏக்கரில் தென்னை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஈரோட்டில் நிலவும் கடும் வறட்சியால், தென்னை மரங்கள் பட்டுப்போனது.

இதுகுறித்து முள்ளாம்பரப்பு விவசாயி செந்தில்குமார் கூறியதாவது:

இந்திய அளவில் தேங்காய் உற்பத்தியில், கேரளா முதலிடத்திலும், தமிழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளது. தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால், தமிழகத்தில் குறுவை சாகுபடி இல்லை.

தமிழகத்தில் பெரிய நீர்த் தேங்கங்களான மேட்டூர், கீழ்பவானி போன்ற அணைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் வறண்டது. தமிழகத்தில், ஐந்து கோடி தென்னை மரங்களில், இரண்டு கோடி மரங்கள் வாடி நிற்கின்றன. மட்டைகள் சரிந்து, குருத்துக்கள் சாயத் தொடங்கி விட்டது.

முள்ளாம்பரப்பில் பெரும்பாலான பகுதியில் தென்னை மரங்கள் பட்டுப்போய் பயனற்று நிற்கிறது. இளநீர் தராத தென்னை மரங்களை வெட்டி விறகுக்காக விற்பனை செய்து வருகிறோம். இதே நிலை நீடித்தால், தமிழகத்தில் விவசாயம் முற்றிலும் அழியும் அபாயம் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நாட்டு கோழி வளர்ப்பு பயிற்சி

ஈரோடு: ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், நாட்டுகோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

வீரப்பன்சத்திரம் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் யசோதை கூறியதாவது:
கால்நடை பொருட்களின் தரத்தை உலக தர நிர்ணயக் குறியீடுகளுக்கு இணையாக உற்பத்தி செய்ய வேண்டியது நமது கடமை. இதற்கான தொழிற்நுட்ப முறைகளை கால்நடை, கோழி, மற்றும் மீன் பண்ணைத் தொழிலில் மேற்கொள்ள வேண்டும். ஆகவே, கால்நடை கோழி மற்றும் மீன் பண்ணைகளின் பராமரிப்பு மற்றும் பிற தொழில் நுட்பங்களை கற்றறிந்து அனுபவம் பெற்ற திறனாளிகளை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், செயல்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்படுகிறது.
நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றி பயிற்சி பெற விரும்புவோர், வீரப்பன்சத்திரம் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் யசோதையை நேரிலோ, அல்லது, 0424- 2291482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். படிக்க தெரிந்த, 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் பயிற்சி கட்டணமாக, ஆயிரம் ரூபாய் செலுத்தி, ஒரு மாத நேர்முக பயிற்சியில் பங்கேற்கலாம்.
புதிதாக அறிமுகம் செய்துள்ள, 18 வகையான செயல் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும், 14 வகையான சுய வேலை வாய்ப்பு பயிற்சிகள் பற்றிய விபரங்களை பெற விரும்புவோர், "தொலை நிலை கல்வி இயக்குனர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை-51,' என்ற முகவரிக்கு தபால் அனுப்பலாம். அல்லது, 044-25554411 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**திட்டங்களை அறிந்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்**

கூடலூர்:"கூடலூர் விவசாயிகள் அரசின் விவசாய திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும்' என உழவர் பயிற்சி முகாமில் வலியுறுத்தப்பட்டது.கூடலூரில், தோட்டகலை துறை சார்பில் "தோட்டக்கலை மாதிரி கிராமமாக' தேர்வு

செய்யப்பட்ட, புத்தூர்வயல் விவசாயிகளுக்கு, இரண்டு நாள் சிறப்பு பயிற்சி முகாம் ஊராட்சி பள்ளியில் நடந்தது. கூடலூர் தோட்ட கலை உதவி இயக்குனர் உமாராணி வரவேற்றார். தோட்டகலை இணை இயக்குனர் மோகன் தலைமை வகித்து பேசுகையில்,""அரசின் திட்டங்கள் குறித்து விவசாயிகள் தெளிவாக அறிந்து, அதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும்,"என்றார். முகாமில், 20 விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் "ஸ்பிரிங்லர்' குழாயும், 10 விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் பவர் "ஸ்பிரேயும்' வழங்கப்பட்டன. முகாமில், உழவர் பயிற்சி நிலைய அலுவலர் ரவி, கவுன்சிலர் சாரம்மா, உதவி தோட்டகலை அலுவலர்கள் அம்பிராஜ், ராமலிங்கம் மற்றும் 50 விவசாயிகள் பங்கேற்றனர்.

**பட்டு புழு வளர்ப்பில் ஆண்டுக்கு ரூ.3 லட்சம் அதிக வருமானம் கிடைக்கும் * பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் தகவல்**

தென்காசி:பட்டு புழு வளர்ப்பில் ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும் என தென்காசி பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் வெற்றிவேல் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்காசி பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் அலுவலகம் நன்னகரத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலக கட்டுப்பாட்டில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 2123.50 ஏக்கர் பரப்பளவில் மல்பரி பயிரிடப்பட்டு 997 விவசாயிகள் புழு வளர்ப்பு செய்து வருகின்றனர்.

நெல்லை மாவட்டத்தில் நான்கு தொழில் நுட்ப சேவை மையங்களும், விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒரு தொழில் நுட்ப சேவை மையமும் செயல்பட்டு வருகின்றன. வி.எம்.சத்திரம், கோணம் செயல் விளக்க பயிற்சி மையங்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் விவசாயிகள் பயிற்சி மையம், செவலூர் மாதிரி மல்பரி பட்டுப் பண்ணை ஆகியவற்றில் விவசாயிகளுக்கு இளம்புழு வளர்ப்பு செய்து வழங்கப்படுகிறது.

மேலும் செங்கோட்டை அரசு பட்டுப் பண்ணை மூலம் மல்பரி நாற்றுகள் உற்பத்தி செய்து விசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் 3.50 லட்சம் பட்டு முட்டை தொகுதிகள் வளர்ப்பு செய்து 2 லட்சத்து 36 ஆயிரம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பு செய்வதற்கு ஏற்ற நிலவளமும், இயற்கையான சூழ்நிலையும் இம்மாவட்டங்களில் உள்ளது. மல்பரி பயிரிட ஏக்கருக்கு 6 ஆயிரத்து 750 ரூபாயும், ஹெக்டேருக்கு 17 ஆயிரத்து 850 ரூபாயும், பட்டுப்புழு வளர்ப்பு மனைக்கு (மூன்று பிரிவுக்கு) 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், சொட்டு நீர் பாசனத்திற்கு எக்டேருக்கு 37 ஆயிரத்து 500 ரூபாயும் அரசு வழங்குகிறது.

மேலும் பட்டு நூற்பு செய்வதற்கும், தானியங்கி பட்டு நூற்பாலைக்கும், பட்டு முறுக்கேற்றும் ஆலை இயந்திரம் நிறுவிடவும் அரசு நிதியுதவி அளிக்கிறது. பட்டு வளர்ப்பில் ஒரு குடும்பம் ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் வரை அதிக வருமானம் ஈட்டலாம். புழு வளர்ப்பு கிராமப்புற வேலைவாய்ப்பினை உருவாக்கியும், பட்டு உற்பத்தியை அதிகரித்தும் தருகிறது.

இவ்வாறு பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் வெற்றிவேல் அறிக்கையில் கூறியுள்ளார்.

குறும்பலாப்பேரியில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

தென்காசி:கீழப்பாவூரில் அட்மா திட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி நடந்தது.

கீழப்பாவூர் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் அட்மா மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கான பயிற்சி குறும்பலாப்பேரியில் நடந்தது.பஞ்., தலைவர் இளங்கோ தலைமை வகித்தார். கீழப்பாவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா வரவேற்றார்.நிகழ்ச்சியில் அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பயிற்சியின் நோக்கம் பற்றி விளக்கினார்.நெல்லை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் இளங்கோ சாகுபடி முறையில் தரமான விதை உற்பத்திபற்றி பயிற்சி அளித்தார்.

ஆலங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முத்துஎழில் கோனோவீடர் பவர்வீடர் பயன்படுத்தப்படுவது குறித்தும், வேளாண்மை அலுவலர் ராமர் தழைச்சத்து உரத்தினை சிக்கனமாக இடுவது பற்றியும், துணை வேளாண்மை அலுவலர் நமச்சிவாயம் மற்றும் அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜாய்பத்ம தினேஷ் செயல்விளக்கம் செய்தும் காட்டினர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கோனோவீடர் பயன்படுத்துவது பற்றிய செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. ஏற்பாடுகளை அட்மா தொழில் நுட்ப வல்லுநர்கள் சந்திரன்,திருமலைப்பாண்டியன் செய்து இருந்தனர்.

உதவி வேளாண்மை அலுவலர் அப்துல்கரீம் நன்றி கூறினார்.

**ராஜகோபாலபேரியில் விதை கிராம திட்டப்பயிற்சி**

தென்காசி:பாவூர்சத்திரம் ராஜகோபாலபேரியில் விதை கிராம திட்டப் பயிற்சி நடந்தது.

வேளாண்மைத்துறை மூலம் விதைக் கிராம திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடியில் தரமான விதைகள் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி ராஜகோபாலபேரியில் நடந்தது.

பஞ்., தலைவர் ஜாண் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முருகன் முன்னிலை வகித்தார். கீழ்ப்பாவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா வரவேற்றார்.

பயிற்சியில் நெல்லை மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குனர், அலுவலர் சிவகுருநாதன் தரமான விதை உற்பத்தியின் அவசியத்தை எடுத்து கூறினார்.

வேளாண்மை அலுவலர் ராமர் தென்னை உற்பத்தியை பாதிக்கும் காண்டாமிருக, சிகப்பு கூன் வண்டு கட்டுபாடு பற்றி பயிற்சி அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் நமச்சிவாயம் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் மற்றும் உரநிர்வாகம் பற்றி எடுத்து கூறினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகையா கனிராஜா,ரமேஷ்,அப்துல்கரீம் செய்து இருந்தனர்.

உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் நன்றி கூறினார்.

**கேள்விக்குறி கம்பத்தில் 1400 ஏக்கரில் நெல் சாகுபடி மின்நிலைய அதிகாரிகளின் நடவடிக்கையால்**

கம்பம்: முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்ட போதும், மின்நிலைய அதிகாரிகளின் நடவடிக்கையால், கம்பத்தில் ஆயிரத்து 400 ஏக்கர் நெல் சாகுபடி கேள்விக்குறியாகியுள்ளது.முல்லைப் பெரியாறு பாசனத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு தென்மேற்கு, வட கிழக்கு பருவ மழைகள் ஏமாற்றியதால், அணையின் நீர் மட்டம் உயரவில்லை. ஒரு போக நெல் சாகுபடி கைவிடப்பட்டது.தற்போது கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம், சின்னமனூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் சாகுபடி அறுவடை துவங்கியுள்ளது. கம்பத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள, ஆயிரத்து 400 ஏக்கர் நெல் சாகுபடிக்கு இன்னமும் ஒரு மாதத்திற்கு தண்ணீர் வேண்டும்.அணையில் இருந்து 400 கன அடியாக திறக்கப்பட்டது. படிப்படியாக குறைக்கப்பட்டு, தற்போது விநாடிக்கு 100 கனஅடி திறந்து விடப்படுகிறது.இந்த தண்ணீரை பயன்படுத்தி கம்பம் விவசாயிகள்,சாகுபடி செய்துள்ள நெல் பயிரை காப்பாற்ற படாதபாடு பட்டு வருகின்றனர்.இந்நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக லோயர்கேம்ப் மற்றும் குள்ளப்பகவுண்டன்பட்டியில் உள்ள "மைக்ரோ' மின்நிலைய நிர்வாகம், திறந்துவிடப்படும் 100 கனஅடி தண்ணீரை வாய்க்காலில் விடாமல் தேக்கி வைத்துள்ளது.இதனால் கம்பத்தில் நெல் பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகிறது. அறுவடைக்கு தயாராகும் சமயத்தில், தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.பொதுப்பணித்துறையினர், மின்வாரிய அதிகாரிகளை அணுகிய போதும், பலனில்லை.மின்நிலையத்தில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி மின்சாரம் எடுத்தாலும் பரவாயில்லை. சோதனை

ஓட்டத்திற்கு தண்ணீர் தேவைப்படுவதாகவும், எப்போது வேண்டுமானாலும் சோதனை ஓட்டம் நடத்தப்படும் என்றும், எனவே தண்ணீரை விடுவிக்க முடியாது என்றும் மின்நிலைய வட்டாரங்கள் கூறியுள்ளன.டெல்டா மாவட்டங்களில் விவசாயம் முழுவதும் இல்லாத நிலையில், தஞ்சை அடுத்து நெல் சாகுபடி அதிகமாக மேற்கொள்ளும், கம்பம் பள்ளத்தாக்கில் நெல் சாகுபடிக்கு ஏற்பட்டுள்ள "நெருக்கடிக்கு' கலெக்டர் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**தவிப்பு காப்பீடு செய்ய முடியாமல் மிளகாய் விவசாயிகள் சாகுபடி கிராமங்கள் விட்டு போனதால் சிக்கல்**

சிவகங்கை: மாவட்டத்தில் இளையான்குடி, எஸ்.புதூர், திருப்புவனம் ஒன்றியத்தில் மிளகாய் சாகுபடி செய்த கிராமங்களை கணக்கெடுப்பின் போது விட்டு விட்டதால், பயிர் காப்பீடு செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி, திருப்புவனம் ஒன்றியத்தில் விரகனூர், கொந்தகை,அம்பலத்தாடி, வயல்சேரி, எஸ்.புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் ஏராளமான விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். வறட்சி, வெள்ளம், பூச்சி தாக்குதலால் பயிர் பாதிப்பு ஏற்படும் போது, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு பெற, விவசாயிகள் காப்பீடு செய்வதுண்டு. இதற்காக,வருவாய், தோட்டக்கலை, புள்ளியியல் துறையினர் சாகுபடி பரப்பு,என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விபரங்கள் அடங்கிய கிராமங்களை பட்டியலிட்டு அரசுக்கு அனுப்புவர். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யும் போது, பட்டியலில் உள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகளை மட்டுமே காப்பீடு செய்ய, அனுமதிப்பர். திருப்புவனம் ஒன்றியத்தில் 3, இளையான்குடி ஒன்றியத்தில் உதயனூர் உட்பட 6 கிராமங்கள், எஸ்.புதூர் ஒன்றியத்தில் ஆறு கிராமங்கள், மிளகாய் சாகுபடி செய்யும் கிராமங்கள் அடங்கிய பட்டியலில் இருந்து விடுபட்டுள்ளது.இம்மூன்று ஒன்றியங்களிலும் வறட்சி காரணமாக மிளகாய் செடி

கருகி விட்டது. இதற்காக, இழப்பீடு பெற,காப்பீடு செய்ய விவசாயிகள் முயன்ற போது மேற்கண்ட கிராமங்களில் மிளகாய் சாகுபடி செய்ததாக கணக்கில் இல்லை எனக்கூறி, அதிகாரிகள் காப்பீடு செய்ய மறுத்து வருகின்றனர்.இதனால் கருகிய மிளகாய் செடிகளை காப்பாற்ற முடியாமலும், இழப்பீடும் கிடைக்காமலும் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

விவசாய சங்க தலைவர் ஆதிமூலம் கூறியதாவது: இது போன்று மாவட்டத்தில், காப்பீடு தொடர்பாக ஏராளமான பிரச்னைகள் உள்ளன. இவற்றை தவிர்க்க, பயிர் சாகுபடி பரப்பு, கிராமங்கள் விடுபடாமல் விவசாயம், வருவாய், புள்ளியியல் துறை எடுக்க வேண்டும் என ஒவ்வொரு விவசாயிகள் குறைதீர் கூட்டத்திலும் வலியுறுத்தி வருகிறோம்.அப்படி இருந்தும், அதிகாரிகள் இது போன்று தவறுகளை செய்து, விவசாயிகளை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளனர், என்றார். துணை இயக்குனர் (தோட்டக்கலைதுறை) இருளப்பன் கூறியதாவது: சாகுபடி கிராமங்கள் குறித்த பட்டியலை முறைப்படி எடுத்து, கமிஷனர் அலுவலகத்திற்கு அனுப்பி விட்டோம். அங்கு சென்ற ஆவணங்களில் இருந்த கிராமங்களை, அங்குள்ள அலுவலர்கள் தவறுதலாக விட்டு விட்டனர். இதை தவிர்க்க, கலெக்டர் பரிந்துரைப்படி, பயிர் சாகுபடி நடக்கும் அனைத்து கிராமங்களின் விபரங்களையும் பட்டியலில் சேர்க்கிறோம், என்றார்.

**மானிய விலையில் கருவிகள், விதைகள்**

வத்திராயிருப்பு: வத்திராயிருப்பு வட்டார விவசாயிகளுக்கு மானியவிலையில் விவசாய கருவிகள், பயறு, பருத்தி விதைகள் வழங்கப்படுகின்றன.தற்போது காலமுறைக்கான நெல்அறுவடை பணிகள் முடிந்துள்ளன. அடுத்து கோடைகாலம் நெருங்குவதால் நீர் தேவை குறைவாக உள்ள பருத்தி, பயறு வகைகளை விவசாயிகள் பயிரிடுவது வழக்கம். இதை முன்னிட்டு வத்திராயிருப்பு வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியவிலையில் பருத்தி, மற்றும் பல்வகை பயறுகளுக்கான விதைகள் அவற்றிற்கான இடுபொருட்கள் அரசு மானியத்துடன் வழங்கப்படுகின்றன. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டித்துரை

கூறுகையில், ""நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்படவுள்ளன. பயறுவகை பயிர்களில் விவசாயிகள் வரிசை நடவு மேற்கொள்ள பயறு விதைக்கும் கருவிகள், களைக்கருவிகள், 50 சதவீத மானியத்துடன் வழங்கப்படுகிறது. சில்பானின் பைகளில் மண்புழு உரம் தயாரிக்க தொழில்நுட்ப பயிற்சியும் வழங்கப்படுகிறது," என்றார்.

**லால்குடி தாலுகாவை**

**வறட்சி பகுதியாக அறிவித்து ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம்**

**சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது**

லால்குடி,

லால்குடி தாலுகாவை வறட்சி பகுதியாக அறிவித்து ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க கோரி சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம்

லால்குடி தாலுகா முழுவதையும் வறட்சி பகுதியாக அறிவித்தும், நஞ்சை, புஞ்சையில் சாகுபடி செய்த பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் உடனே இழப்பீடு வழங்க வலியுறுத்தி விவசாய சங்கம் சார்பில் லால்குடியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் பாசனதாரர் சபை தலைவர் தங்கமணி, வக்கீல் வைரமணி, உழவர் மன்ற கூட்டமைப்பு தலைவர் முத்தமிழ்செல்வன், தி.மு.க. நகர செயலாளர் துரை.மாணிக்கம், பருத்தி மேம்பாட்டுக்குழு உறுப்பினர் மணிமாறன், ஊராட்சிகள் தலைவர் கோல்டன் ராஜேந்திரன், மதிவாணன், வக்கீல் சேவியர் ஆகியோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ. தலைமை வகித்து பேசியதாவது:–

ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம்

லால்குடி தாலுகா முழுவதையும் வறட்சி பகுதியாக அறிவித்து நஞ்சை, புஞ்சை நிலங்களில் சாகுபடி செய்த அனைத்து பயிர்களுக்கும் இழப்பீடு தொகையாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் உடனே வழங்கவேண்டும். மத்திய விவசாயக்குழு டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டது. ஆனால் தி.மு.க. சட்டமன்ற தொகுதியான லால்குடி புறக்கணிக்கப்பட்டது.

நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீர் இல்லாததால் கருகிய நிலையில் இருப்பதால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வழங்க வேண்டும். விவசாயக்கடன் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும். லால்குடி பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் லாரிகள் மூலம் மணல் அள்ளுவதால் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே போகிறது. எனவே தமிழக அரசு மணல் அள்ளுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

**தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கவேண்டும் ஆர்.நல்லகண்ணு பேட்டி**

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய குழு உறுப்பினர் ஆர்.நல்லகண்ணு கூறினார்.

இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

<u>குடிதண்ணீர் தட்டுபாடு</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையும், தென்மேற்கு பருவமழையும் பொய்த்துவிட்டதால் தமிழகம் முழுவதும் வறட்சி அதிகரித்துவிட்டது. குடிதண்ணீர் தட்டுபாடு ஏற்படும் நிலைமை ஏற்பட்டு உள்ளது. நன்செய், புன்செய்களில் பயிரிட முடியாதநிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மத்திய அரசு தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து நிவாரணம் வழங்கவேண்டும். பயிர்காட்டு தொகை, நஷ்டஈடு ஆகியவற்றை உடனே வழங்கவேண்டும்.

மத்திய அரசு காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசு இதழில் வெளியிடாமல் காலம் தாழ்த்தி வருகிறது. தமிழகத்தில் உள்ள கருகிய பயிர்களை காப்பாற்ற காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு மறுக்கிறது. அதை கண்டிக்க மத்திய அரசு

மறுப்பது தமிழகத்தை வஞ்சிக்கின்ற செயலாகும். டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க தமிழக அரசு கேட்ட ரூ.1000 கோடியை உடனே வழங்கவேண்டும். வறட்சி பாதிக்கப்பட்ட பகுதியில் ஆய்வு நடத்துகின்ற உயர்மட்ட குழு தென்மாவட்டங்களையும் வந்து பார்வையிட்டு அறிக்கை கொடுக்கவேண்டும். உணவு பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதை தடை செய்யவேண்டும் என்று நாங்கள் பலமுறை கூறி வருகிறோம். அரசு பணபயிர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் உணவு பொருட்களுக்கு கொடுப்பதில்லை.

**நாமக்கல்லில் 6 ஆயிரம் மூட்டை பருத்தி ஏலம்; ரூ.1 கோடிக்கு விற்பனை ஆனது**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 6 ஆயிரம் மூட்டை பருத்தி ஏலத்துக்கு குவிந்தன. இவை ஏறத்தாழ ரூ.1 கோடிக்கு விற்பனை ஆனது.

**பருத்தி ஏலம்**

நாமக்கல் திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது.

நேற்று நடந்த ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் ஏறத்தாழ 6 ஆயிரம் மூட்டை பருத்தியை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

**விலை விவரம்**

இதில் ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரத்து 300 வரையிலும், டி.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 500 முதல் ரூ.5 ஆயிரத்து 400 வரையிலும் ஏலம் போனது. இதேபோல் சுரபி ரக பருத்தி ரூ.5500 முதல் ரூ.6 ஆயிரம் வரை ஏலம் போனது.

### ரூ.1 கோடிக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகளை திருப்பூர், கோவை, தேனி, அவினாசி, கொங்கணாபுரம், சேலம் பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். நேற்று ஏலத்துக்கு வந்த 6 ஆயிரம் மூட்டை பருத்தி ஏறத்தாழ ரூ.1 கோடிக்கு ஏலம் போனதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். குளிர்கால பருத்தி சீசன் சூடுபிடித்து உள்ளதால், பருத்தி வரத்து அதிகரித்து உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

### நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை கிடுகிடு உயர்வு 340 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கிடுகிடு என உயர்ந்து 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

### முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் கடந்த சில நாட்களாக முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை அதிரடியாக 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 340 காசுகளாக உயர்ந்து உள்ளது.

### பிற மண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:

ஐதராபாத்318, விஜயவாடா, தனுகு314, பார்வாலா344, சென்னை340, மைசூர்328, பெங்களூர்330, மும்பை350, டெல்லி360, கொல்கத்தா355.

முட்டைக்கோழி கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ ரூ.42 ஆக உயர்ந்து உள்ளது. கறிக்கோழி கிலோ ரூ.80க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.1 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.81 ஆக உயர்ந்து உள்ளது.

இந்த வரலாறு காணாத விலை உயர்வுக்கு கறிக்கோழி உற்பத்தி குறைவு மற்றும் தீவன மூலப்பொருட்களின் விலை உயர்வே காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**காரணம் என்ன?**

முட்டை விற்பனையை பொறுத்த வரையில் தைப்பூசம் முடிவடைந்ததை தொடர்ந்து தமிழகம் மற்றும் கேரளாவில் மேம்பட்டு உள்ளது. இதேபோல் கடும் குளிர் காரணமாக வடமாநிலங்களிலும் முட்டை விற்பனை அதிகரிக்க தொடங்கி உள்ளது. இதுவும் விலை உயர்வுக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும் குறைதீர்க்கும்நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை

தர்மபுரி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்ட மாக அறிவிக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**குறைதீர்க்கும் கூட்டம்**

தர்மபுரி மாவட்ட விவசாயி கள் குறைதீர்க்கும் நாள் கூட் டம் தர்மபுரி கலெக்டர் அலு வலகத்தில் கலெக்டர் ஆர்.லில்லி தலைமையில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி ராமர், வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் மற்றும் பல்வேறு துறை அதி காரிகள் முன்னிலை வகித் தனர். இந்த கூட்டத்தில் பங் கேற்ற விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், மற்றும் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள்.

**வறட்சி மாவட்டம்**

கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் பேசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததால் விவ சாயப்பணிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் உரிய விளைச்சல் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை கருத்தில் கொண்டு தர்மபுரி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஏக்கருக்கு தலா ரூ.10 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத் தினார்கள். கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் பேசுகை யில், டெல்டா மாவட்டங்களில் நெல்விவசாயம் பாதிக்கப் பட்டதை போலவே தர்மபுரி மாவட்டத்தில் கரும்பு விவசா யம் பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்குரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத் தினார்கள்.

**ஏரிகளுக்கு உபரி நீர்**

தர்மபுரி மாவட்டத்தில் பக லில் 3 மணிநேரமும், இரவில் 2 மணிநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. விவசாய பணிகளை கருத்தில் கொண்டு கூடுதல் நேரம் மின்சாரம் வழங்க வேண்டும் என்று கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வாணியாறு அணையில் மழைக்காலங்களில் சேரும் உபரி நீரை ஆயக்கட்டு பகுதி களில் உள்ள 10க்கும் மேற் பட்ட ஏரிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் விவசாயி கள் தரப்பில் கோரிக்கை விடுக் கப்பட்டது.

இந்த கூட்டத்தில் விவசாயி கள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் ஆர்.லில்லி தெரி வித்தார். தர்மபுரி மாவட் டத்தில் வறட்சி பாதித்த பகுதி களை கணக்கெடுக்கும் பணி வருவாய்துறை மூலம் நடக் கிறது. வறட்சி பாதித்த பகுதி களுக்கு நிவாரண உதவிகள் வழங்க அரசுக்கு பரிந்துரைகள் அனுப்பபட்டுள்ளது. தாட் கோவில் மானியத்துடன் கூடிய விவசாயக்கடன் பெற நடப்பாண்டில் இருந்து இணையதளம் மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும் என்று இந்த கூட்டத்தில் அதி காரிகள் தெரிவித்தனர்.

**பருவ மழை பொய்த்ததால் கிருஷ்ணகிரியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

பருவ மழை பொய்த்து போனதால் கிருஷ்ண கிரியை வறட்சி மாவட் டமாக அறிவிக்க வேண் டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக் டரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை யில் விவசாயிகள் குறை தீர்க் கும் நாள் கூட்டம் நடைபெற் றது. கூட்டத்திற்கு வேளாண்மைத் துறை இணை இயக்குநர் குணசேகரன் முன் னிலை வகித்தார். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், வேளாண்மை கிடங்கு பழுது பார்த்திட வேண்டும். மக்கள் நலத்திட்டங்கள் குறித்த விளம் பரப் பலகைகள் அனைத்து அலுவலகங்களில் வைக்க வேண்டும்.

இயற்கை வேளாண்ம செய் யும் விவசாயிகளுக்கு தரச் சான்று வழங்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து போன தால் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். காவேரிப் பட்டணத்தில் மல்லிகை பூ விற்பனை மையம் அமைக்க வேண்டும். விவசாய பயிர் இழப்பீட்டிற்கு நிவாரணம் வழங்க வேண்டும். வனதுறை சார்பில் மின்வேலி அமைக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேசினார்கள்.

**உடனடி நடவடிக்கை**

கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது:

விவசாயிகளின் கோரிக்கை களை விரைந்து தீர்க்க அரசு அலுவலர்கள் முன்வர வேண் டும். பொதுப் பணித்துறை மூலம் ஏரி ஆக்கிரமிப்பு அகற் றுதல், தூர்வாருதல் போன்றவை நிதிநிலைமை களுக்கேற்ப பகுதி பகுதியாக மேற்கொள்ளப்படும்.

காவேரிப்பட்டணத்தில் மல்லிகை பூவிற்கு என தனி விற்ப மையம் அமைக்க தேவை யான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். வங்கிகள் விவசாய தொழில்களுக்கும், மகளிர் சுய உதவிக்குழுக் களுக்கும் முன்னுரிமை வழங்கி அவர்களின் வாழ்வில் பொரு ளாதார முன்னேற்றம் பெற்றிட உதவிட வேண்டும். விவசாயி களும் மானியத்துடன் கூடிய மரபுசாரா எரிசக்தியை பயன் படுத்திட வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம், மாவட்ட கலெக் டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) நாகராஜ், தோட்டக்கலத்ற இணை இயக்குநர் பெரியசாமி உள்பட விவசாயிகள் பலர் பங்கேற் றனர்.

**உளுந்து பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண்மை உதவி இயக்குநர் விளக்கம்**

உளுந்து பயிர் சாகு படியில் அதிக மகசூல் பெறுவது எப்படி என்று வேளாண்மை உதவி இயக்குனர் விளக்கம் அளித்துள்ளார்.

மன்னார்குடி வேளாண்மை உதவி இயக்குநர் உத்திராபதி வெளியிட்டுள்ள ஒரு அறிக் கையில் கூறியிருப்பதாவது:

**உளுந்து சாகுபடி**

மன்னார்குடி வட்டாரத்தில் தற்போது உளுந்து விதைத்து 25 முதல் 30 நாட்கள் பயிர் களாக உள்ளது. இத்தருணத்தில் ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் தெளிப்பதற்கு முதல்நாள் மாலையில் ஊற வைத்து மறுநாள் மாலையில் வடிகட்டி 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் மாலை நேரத்தில் தெளிக்கவேண்டும். இதனால் 16 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கும்.

தெளித்த 10 நாட்களுக்கு பிறகு மீண்டும் ஒருமுறை தெளிக்கலாம்.

மேலும் ஏக்கருக்கு ஒரு கிலோ நுண்ணூட்டத்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்தும் தெளிக்கலாம். மேலும் இலைகள் மஞ்சள் நிறமாக இருந்து மஞ்சள் தேமல்நோய் காணப்பட்டால் செடிகளை பிடுங்கி அப்புறப்படுத்திவிட வேண்டும்.

**மானியம்**

தற்போது வாய்ப்பு இருக்கிற பகுதிகளில் உளுந்து விதைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் ஆடுதுறை5, ஆடுதுறை3, வி.பி.என்.4 உளுந்து விதை களை 50 சதவீத மானிய விலையில் பெற்று விதைத்து பயன்பெறலாம்.

இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டு இருந்தது.

**விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கான வங்கி கடன் அதிகளவில் வழங்க வேண்டும் கலெக்டர் சம்பத் உத்தரவு**

விழுப்புரம் மாவட்டத் தில் தோட்டக்கலை பயிர்களுக்கான வங்கி கடன் அதிகளவில் வழங்க வேண்டும் என்று கலெக்டர் சம்பத் உத்தரவிட்டுள்ளார்.

**ஆய்வுக் கூட்டம்**

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வங்கியாளர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட் டத்திற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி பேசிய தாவது:

விழுப்புரம் மாவட்டத்திற்கு 201314ம் ஆண்டிற்கான நபார்டு வங்கி தயாரித்த கடன் திட்ட அறிக்கை விவ சாயம் பண்ணை சாரா தொழில்கள், துணை தொழில்கள் மற்றும் ஏனைய ஊரக தொழில்களுக்கு முன் னுரிமை கடன் ரூ.3,367.21 கோடி அளவிற்கு வாய்ப் புள்ளதாக திட்ட அறிக்கை தெரிவிக்கிறது. 12வது ஐந்தாண்டு திட்ட ஆண்டில் தமிழக அரசு 8.2 சதவீத வளர்ச்சியை அடைய திட்டமிட்டுள்ளது. இதற்கு உறுதுணையாக விவசாயத் திற்கான வங்கி கடன் அளவு அதிகரிக்க வேண்டும்.பயிர்க் கடன், தோட்டக் கலை பயிர் கள், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கிராமப்புறங்களில் விவசாய விளைபொருட் களை சேக ரிக்க கிடங்குகள், உணவு பதப் படுத்துதல், நில மேம்பாடு, விவசாய சிறு கரு விகள் வாங்க கடன் வழங்கு தல் உள்ளிட்டவை களுக்கு கடன் வழங்க நட வடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.விவசாய முதலீட்டு கடன் வங்கிகள் மூலம் வழங்கு வதற்கான வாய்ப்பு ரூ.1,348.03 கோடியாகவும் குறைந்தகால பயிர் கடன்களுக்கு ரூ.1,522.80 கோடியாகவும் திட்டத்தில் அமைந்துள்ளது.

**வங்கி கடன்**

பண்ணைசாரா தொழில் களுக்கான கடன் திட்டம் ரூ.175.98 கோடியாகவும், ஏனைய முன்னுரிமை துறை களுக்கு ரூ.320.40 கோடி யாகவும் இத்திட்டத்தில் தெரி விக்கப் பட்டுள்ளது. நபார்டு வங்கி தயாரித்த கடன் திட்ட அறிக்கையை ஆதாரமாக பயன்படுத்தி மாவட்ட முன்னோடி வங்கி, ஆண்டு கடன் அறிக்கை தயாரித்து வெளியிட உள்ளது. வங்கிகள் திட்ட அறிக்கையில் உள்ள விவரங் களை பயன் படுத்தி விவசாய கடன்களையும் மற்றும் ஊரக வளர்ச்சிக்கு தேவையான கடன்களையும் வழங்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக் கான வங்கி கடன் அதிகளவில் வழங்க திட்டமிடப்பட் டுள்ளது. அதேபோல் ஆடு வளர்ப்பதற்கான வங்கி கடன் மானியத்தோடு வழங்கப் படுவதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக நபார்டு வங்கி தயாரித்த திட்ட அறிக்கையை கலெக்டர் சம்பத் வெளியிட, முதல் பிரதியை ரிசர்வ் வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலர் கந்தசாமி பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் நபார்டு வங்கியின் துணை பொது மேலாளர் விக்ரமன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாலச்சந்திரன், இந்தியன் வங்கியின் துணை பொது மேலாளர் நடராஜன், மகளிர் திட்ட அலுவலர் ராஜா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராஜகணேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**காகித ஆலை மூலம் ஒருங்கிணைந்த கறவை மாட்டு பண்ணை திட்டம்**

காகித ஆலை சார்பில் ஒருங்கிணைந்த கறவை மாட்டு பண்ணை திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

**பண்ணை திட்டம்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் ஒருங்கிணைந்த கறவை மாட்டு பண்ணை திட்டம் தொடக்க விழா நடைபெற்றது. தவிட்டுப்பாளையத்தில் தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சிக்கு காகித ஆலை முதன்மை பொது மேலாளர் மணி கலந்து கொண்டு பண்ணை திட்டத்தை தொடங்கி வைத்து பேசி னார்.

அப்போது அவர் கூறிய தாவது:

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரூர், பண்டுதகாரன்புதூரிலுள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நடத்தும் கால்நடை பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் ஒருங்கிணைந்த கறவை மாட்டு பண்ணைத்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

**முக்கிய நோக்கம்**

இக்கறவை மாட்டுப் பண்ணைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக கறவை மாட்டு பராமரிப்பில் தீவன செலவை குறைத்தல் ஆகும். அதே போன்று கறவை மாட்டின் உற்பத்தி திறனை அதிகரிப்பது, பாலை மதிப்பு கூட்டிய பால் பொருட்களாக மாற்றுவது மற்றும் சாணக் கழிவினைக் கொண்டு சாண எரிவாயு அடுப்பு அமைப்பது போன்றவை அமைந்துள் ளது.

இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்திட 6 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 50 கறவை மாட்டு பண்ணையாளர்கள் என மொத்தம் 300 பேர் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

மேலும் அவர்களுக்கு அறிவியல் ரீதியான கறவை மாட்டுப்பராமரிப்பு பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது.

இவர்களில் 6 பேர் தேர்வு செய்யப்பட்டு பண்ணையில் ஒருங்கிணைந்த 6 கறவை மாட்டு மாதிரி பண்ணைகள் அமைக்கப்பட்டு மற்றவர்களை ஊக்குவிக்க வழி வகுக்கப் படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர். அகிலா, காகித ஆலை துணை பொது மேலாளர் பட்டா பிராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்**

விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து விவசாய தொழிலாளர் சங்க நிர்வாகிகள் கூட்டத் தில் தீர்மானம் நிறை வேற்றப்பட் டுள்ளது.

**நிர்வாகிகள் கூட்டம்**

புதுக்கோட்டையில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் கள் சங்க மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ஜீவாதாசன் த

லமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சுந்தரராசன் மாநிலகுழு கூட்ட முடிவு களை விளக்கி பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு:

**நஷ்டஈடு நிவாரணம்**

புதுக்கோட்டை மாவட் டத்தை வறட்சி பகுதியாக அறிவித்து போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரண நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். கருகிப் போன பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் நஷ்ட ஈட்டை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். விவசாய தொழி லாளர் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக தலா ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் மாதம் ஒன் றுக்கு 30 கிலோ அரிசி வழங்க வேண்டும்.

**வீட்டு மனைப்பட்டா**

வீட்டுமனை, வீட்டு மனைப் பட்டா கேட்டு விண்ணப் பித்துள்ள அனைவருக்கும் வீட்டுமனை, வீட்டு மனைப் பட்டா உடனடியாக வழங்க வேண்டும்.

வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பணிபுரிபவர் களுக்கு தினக்கூலியாக அரசு அறிவித்தபடி ரூ.132 வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## நெல் விவசாயம் அடியோடு பாதிப்பு: ஒரு எக்டேருக்கு 5,100 கிலோவில் இருந்து 500 கிலோவாக குறைந்தது விவசாயிகள் பெரும் கவலை

ராமநாதபுரம் மாவட் டத்தில் இந்த ஆண்டு ஒரு எக்டேருக்கு வெறும் 500 கிலோ நெல் மட்டுமே கிடைத்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**மழை குறைவு**

ராமநாதபுரம் மாவட் டத்தின் ஒரே நீர் ஆதாரம் வைகை தண்ணீரும், வட கிழக்கு பருவமழையும் தான். மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 827 மில்லி

மீட்டராகும். இதில் தென் மேற்கு பருவமழை ஆண்டு சராசரி 135 மி.மீ. கடந்த ஆண்டு 74 மி.மீட்டரும், இந்த ஆண்டு 86 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது.

தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால்வட கிழக்கு பருவமழை கைகொடுக்கும் என்றநம்பிக் கையில் மாவட்டம் முழு வதும் 54 ஆயிரம் ஏக்கரில் கண்மாய் பாசனமும், 74 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி விவசாயமும் என ஒரு லட் சத்து 28 ஆயிரம் எக்டே ரில் நெல் விவசாயம் மேற் கொண்டனர்.

சராசரி

ஆனால் மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை.அக்டோர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் 501 மி.மீட்டர் சராசரியாக பெய்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு அக் டோர் மாதத்தில் 330 மி. மீட்டரும், நவம்பர் மாதத்தில் 56 மி.மீட்டரும், டிசம்பர் மாதத்தில் 62 மி.மீட்டருமாக மொத்தம் 449 மி.மீட்டர் மழையே பெய்துள்ளது. ஆண்டு சராசரியை விட 52 மி.மீட்டர் மழை குறைவாக பெய்துள்ளது. கடந்த ஆண்டு 711 மி.மீட்டர் மழை பெய்து விவசாயிகளுக்கு கை கொடுத் தது.

ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 330 மி.மீட்டர் மழை பெய்திருந் தாலும் இவை அனைத்தும் ராமேசு வரம், மண்டபம், தீர்த்தாண்டதானம், வட் டாணம், தொண்டி ஆகிய கடலோர பகுதிகளில் தான் பெய்துள்ளது.

நிவாரணம்

விவசாயம் மேற்கொள்ளும் பகுதியில் சிறிதளவு கூட மழை பெய்யவில்லை. ஆண்டு சராசரி மழையளவான 827 மி.மீட்டரில் இந்த ஆண்டு 598 மி.மீட்டர் மட்டுமே மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு எக்டேரில் 5 ஆயிரத்து 119 கிலோ நெல் அறுவடை செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 2 பருவமழைகளும் பொய்த்து போனதாலும், வைகைதண் ணீர் வராததாலும் ஒருஎக் டேருக்கு 400 முதல் 500 கிலோ நெல் மட்டுமே அறு வடை செய்யப்பட்டுள் ளது. இதனால்மாவட்டம்முழு வதும் விவசாயிகள் கவலை யில் ஆழ்ந்துள்ளனர்.

குறிப்பாக கடலாடி, முதுகுளத்தூர், கமுதி உள் ளிட்ட பகுதிகளில் நெல் விவசாயம் அடியோடு அழிந் தது. ஒட்டு மொத்தமாக பருவமழை ஏமாற்றியதால் மாவட்டத்தில் 94 ஆயிரத்து 600 எக்டேர் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும்வரு வாய்த்துறை மூலம் விவ சாயபாதிப்பு குறித்து கணக் கெடுக்கும் பணி முடிவடைந்த பின்னர் இறுதி அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட உள் ளது.

முதல் கட்டமாக 97 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு உரிய இழப்பீடு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலை விவசாய துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினகரன்

கரும்புக்கான குறைந்தபட்ச ஆதார விலை 23.5% உயர்வு



புதுடெல்லி : கரும்புக்கான குறைந்தபட்ச விலையை மத்திய அரசு, குவிண்டாலுக்கு 23.5 சதவீதம் உயர்த்தி ரூ.210 ஆக்கியுள்ளது. இதுகுறித்து, மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது: கரும்பு விவசாயிகளுக்கு ஆலைகள் கொடு க்க வேண்டிய விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. கடந்த 2012,13 சந்தை ஆண்டில்(அக்டோபர்,செப்டம்பர்), கரும்புக்கான உறுதி அளிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை குவிண்டாலுக்கு ரூ.170 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூடி, 2013,14ம் சந்தை ஆண்டில் கரும்புக்கான குறைந்தபட்ச விலை யை நிர்ணயித்துள்ளது. இதன்படி, விலையை 23.5 சதவீதம் உயர்த்தி, குவிண்டாலுக்கு ரூ.210 ஆக நிர்ணயித்துள்ளது. அதாவது, கடந்த ஆண்டு விலையில் ரூ.40 உயர்த்தப்படுகிறது.

விவசாய பொருட்களுக்கான விலை கமிஷன் அளித்த பரிந்துரையை ஏற்று, கரும்புக்கான குறை ந்தபட்ச விலையை உயர்த்துவது குறித்த திட்டத்தை மத்திய அமைச்சரவைக் குழுவிடம் உணவுத்துறை அமைச்சகம் முன்வைத் தது. அது தற்போது ஏற்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். மத்திய அரசு கரும்புக்கான குறைந்தபட்ச விலையை நிர்ணயித்தாலும், உத்தரப் பிரதேசம், தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்கள், தங்கள் மாநில ஆலோசனை விலைக்குழு அளிக்கும் பரிந்துரையின் பேரில் கரும்புக்கான ஆதார விலையை நிர்ணயிக்கின்றன.

**நாங்குநேரியில் கடும் வறட்சி பயிர்களை காப்பாற்ற போராடும் விவசாயிகள்**

**கால்நடைகளுக்கும் தண்ணீர் இல்லை**

நாங்குநேரி, : நாங்குநேரி பகுதியில் போதிய மழை பெய்யாததால் நீர் நிலைகள் வறண்டு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பயிரிட்டுள்ள வாழை, தென்னை மற்றும் பழ மரங்களையும், சில இடங்களில் கிணற்று பாசனத்தை நம்பி குறைந்த அளவில் பயிரிட்டுள்ள நெற்பயிரையும் காப்பாற்ற போதிய தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நாங்குநேரி பெரிய குளத்திலுள்ள ஜீயர் ஊற்று, பள்ளம்குழி, சிவன்கோவில் தெப்பக்குளம் ஆகியவை கோடைக்காலத்திலும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கும், கால்நடைகளுக்கும் பயன்படுத்தி வருவது வழக்கம். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் பள்ளம்குழி முற்றிலுமாக காய்ந்து விட்டது. மேலும் கிணறுகளில் நிலத்தடி நீர் குறைந்துள்ளதாலும், மின் வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் பெரிய குளத்தின் பள்ளங்களிலும், தெப்பக் குளத்திலும்

தேங்கி நிற்கும் குறைந்த அளவு நீரை ஆயில் மோட்டார்கள் மூலம் எடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மோட்டார் வாடகை, டீசல், தண்ணீர் கொண்டு செல்ல பிளாஸ்டிக் பைப் என கூடுதலான செலவுகளை விவசாயிகள் சந்திக்க வேண்டியுள்ளது.

இனி வருங்காலங்களில் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளுக்கு குடிநீர் கிடைக்காமல் போகும் என கால்நடை வளர்ப்போர் அஞ்சுகிறார்கள்.

நாங்குநேரி பகுதியில் வழக்கமாக ஜூன் மாதம் வரை நீர் நிலைகளில் குறைந்த அளவிலாவது நீர் இருக்கும் நிலை மாறி முன் கூட்டியே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வீடுகளிலுள்ள ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் கிடைப்பதில் சிரமம் ஏற்படும் என அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ள னர்.

## நெற்பயிரை காப்பாற்ற கழிவுநீரை வயலுக்கு பாய்ச்சும் விவசாயிகள்

## கடையநல்லூரில் அவலம்

கடையநல்லூர், : தமிழகத்தில் தென் மேற்கு பருவமழையை தொடர்ந்து வடமேற்கு பருமழையும் சரிவர பெய்யாததால் விவசாயம் கேள்விகுறியாகி விட்டது.

கடையநல்லூர் பகுதி யில் தற்போது பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால், அணை, குளம் மற்றும் நீர் ஆதாரப்பகுதிகளில் போதுமான அளவிற்கு தண்ணீர் இல்லாததால் பயிரை காப் பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர்.

கடையநல்லூர் அட்டைக்குளம் பகுதியில் உள்ள நிலங்களுக்கு சீவலங்கால்வாய் வழியாக தண் ணீர் வந்துகொண்டிருந்த நிலையில் தற்போது தண் ணீர் வற்றிவிட்டதால் ஆங்காங்கே தேங்கி நிற்கும் சாக்கடை நீரையும் சேக ரித்து விவசாயிகள் நிலங்களுக்கு பாய்ச்சும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கடையநல்லூர் நகரப்பகுதி வழியாக செல்லும் சீவலங்கால்வாயில் அளவுக்கு அதிகமாக ஆக்கிரமிப்பு உள்ளதால் நீரோட்டம் அடிக்கடி பாதித்து வருவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டிவருகின்றனர்.